கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு

# பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பனி லிமிட்டட்

# வெற்றிடங்கள்

பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பனி லிமிட்டட் ஆனது இலங்கையில் இரசாயனங்களின் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தலில் ஈடுபடும் இலாபகரமான மற்றும் தன்னிறைவு பெற்ற முழுமையான அரசுக்குச் சொந்தமான நிறுவனம் ஒன்றாகும். பொருத்தமான தனிநபர்களிடம் இருந்து பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

## பிரதி பொது முகாமையாளர் பதவி (பொறியியல்) - HM 1–1 (பதவி 01)

**பதவியின் பொறுப்புகள்**

இரசாயன கொள்கைகளை மேம்படுத்தல் மற்றும் செயற்படுத்தல் மற்றும் புதிய இரசாயன உற்பத்தித் திட்டங்கள் மற்றும் வடிவமைப்பின் நடைமுறைகள், ஆரம்பித்தல் மற்றும் மேற்பார்வை மற்றும் பாதுகாப்பு ஒழுங்குமுறைகளை செயற்படுத்தல்.

**தகைமைகள்**

**வெளிவாரி அபேட்சகர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)**

1. ப.மா.ஆ. மூலம் அங்கீரிக்கப்பட்ட பொறியியல் (இரசாயனம்) துறையில் இளமாணிப் பட்டம்

   அத்துடன்

   தொடர்புடைய துறையில் பட்டப் பின்படிப்பு தகைமை ஒன்று (முதுமாணி) அல்லது பதவியின் விடயப்பரப்புக்கு தொடர்புடைய அங்கீரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றில் கூட்டு அங்கத்துவம்

   மற்றும்

   கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் “முகாமைத்துவ தரம்” ஒன்றில் குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவம்.

2. பதவியின் விடயப்பரப்புக்கு தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றில் இணை அங்கத்துவம்

   மற்றும்

   கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் “முகாமைத்துவ தரம்” ஒன்றில் குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவம்.

**உள்ளக அபேட்சகர்கள் (மேலுள்ள 1 அல்லது 2)**

1. மேலுள்ள வெளிவாரி அபேட்சர்களுக்குத் தேவையான தகைமைகளை பெற்றிருத்தல்.
2. பதவிக்கு தொடர்புடைய விடயப்பரப்பில் தரம் I முகாமைத்துவ பிரிவில் உள்ள பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (5) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**வயது வரம்பு**

35 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**சம்பள அளவு HM 1-1**

**HM 1-1 - 2025 ரூபா [140,640, 4,100x15 - 202,140]**

மாதச் சம்பளம் - 01/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின்படி சம்பளம் வழங்கப்படும்.

## உதவி பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) - MM 1–1 (பதவி 01)

**தகைமைகள்**

**வெளிவாரி அபேட்சகர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)**

1. ப.மா.ஆ. மூலம் அங்கீரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல்/ சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்/ வர்த்தக நிர்வாகம்/ வர்த்தக முகாமைத்துவ துறையில் பட்டம்

   மற்றும்

   முதல் பட்டத்தைப் பெற்ற பின்னர் பதவிக்குத் தொடர்புடைய துறையில் குறைந்தது ஓர் ஆண்டு தலைமைக்கு பின்னரான அனுபவம்.

2. பதவி மற்றும் விடயப்பரப்புக்கு தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனத்தின் இடைநிலை பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

   மற்றும்

   முதல் பட்டத்தைப் பெற்ற பின்னர் பதவிக்குத் தொடர்புடைய துறையில் குறைந்தது ஓர் ஆண்டு தலைமைக்கு பின்னரான அனுபவம்.

**உள்ளக அபேட்சகர்கள் (மேலுள்ள 1 அல்லது 2)**

1. மேலுள்ள வெளிவாரி அபேட்சர்களுக்குத் தேவையான தகைமைகளை பெற்றிருத்தல்.
2. பதவிக்கு தொடர்புடைய விடயப்பரப்பில் கனிஷ்ட முகாமைத்துவ (JM) பிரிவில் உள்ள பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (5) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**வயது வரம்பு**

22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**சம்பள அளவு MM 1-1**

MM 1-1 - 2025 ரூபா [91,690, 2,480x10 3,450x15 –168,240]

மாதச் சம்பளம் - 01/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின்படி சம்பளம் வழங்கப்படும்.

## முகாமைத்துவ உதவியாளர் - MA 1–2 (பதவி 04)

**தகைமைகள்**

**வெளிவாரி அபேட்சகர்கள்**

**கல்வி**

(a) க.பொ.த. (சா/த) பரீட்சையில்

i. சிங்களம்/ தமிழ்

ii. ஆங்கில மொழி

iii. கணிதம்

உட்பட நான்கு பாடங்களுக்கான திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(b) க.பொ.த. (உ/த) பரீட்சையில் (பொது பரீட்சை தவிர) மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்ளக அபேட்சகர்கள்**

விண்ணப்பிப்பதற்கு தகுதியான பின்வரும் தகைமைகளை பெற்ற ஆரம்ப நிலை – தேர்ச்சி பெற்ற மற்றும் ஆரம்ப நிலை – தேர்ச்சி பெறாத பிரிவுகளின் பணியாளர்கள்

**கல்வி**

க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்களம்/ தமிழ், ஆங்கில மொழி, கணிதம் உட்பட நான்கு பாடங்களுக்கான திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**மற்றது**

மேலுள்ள பணியாளர் பிரிவின் கீழ் நிரந்தர பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயது வரம்பு**

18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது).

**சம்பள அளவு - MA 1-2**

MA 1-2 - MA 1-2-2025 ரூபா 46,220 540x10, 630x7, 1,080x12, 1,280x12 84,350/-

**மாதச் சம்பளம் -** 01/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின்படி சம்பளம் வழங்கப்படும்.

## அலுவலக உதவியாளர் - PL 1 (பதவி 01)

**கல்வி**

க.பொ.த. (சா/த) பரீட்சைக்காக தோற்றி இருத்தல் வேண்டும்.

**வயது:** 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு**

PL 1 – 2025 ரூபா 40,500, 450x10, 490x10, 540x7, 590x15, 62,530/-

**மாதச் சம்பளம் -** 01/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின்படி சம்பளம் வழங்கப்படும்.

**பொதுவான விதிகள் மற்றும் நிபந்தனைகள்**

- விண்ணப்பதாரர்கள் ஆட்சேர்ப்பு திகதியின்படி அனைத்து தேவையான தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
- அரச சேவை/ அரச சார்பு நிறுவனத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தமது குறித்த நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகளுடன் சேர்த்து உறவினர் அல்லாத இரு நடுவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு சுயவிபரக்கோவையுடனான தமது CV இனை சமர்ப்பித்தல் வேண்டும்.
- பத்திரிகை விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டவாறு தகைமைகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.
- நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் பணியாற்றுவதற்கும் பதவியில் உள்ள பணிகளை மேற்கொள்வதற்கும் விண்ணப்பதாரர்கள் உடல் மற்றும் உள சுகாதாரத்தை பெற்றிருத்தல் வேண்டும்.
- முழுமை பெறாத அல்லது தாமதிக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- குறுகிய பட்டியலில் சேர்க்கப்பட்ட அபேட்சகர்கள் மாத்திரமே நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.
- போட்டிரீதியான எழுத்துப் பரீட்சை மற்றும்/ அல்லது நியமன நிர்வாகத்தால் நியமிக்கப்பட்ட குழு ஒன்றின் மூலம் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை ஒன்று.

தகைமைகளின் சான்றிதழ்களுடன் சேர்த்து மேலுள்ள தகைமைகளை உள்ளடங்கிய விண்ணப்பதாரர்கள் சுயமாக தயாரித்த சுயவிபரக் கோவையை 2025 ஓகஸ்ட் 21 ஆம் திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்**

**பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பனி லிமிட்டட்,**

**இல. 446, L.3 காலி வீதி, இரத்மலானை.**

**0112 324466/ 0112 437556**

**pccl.lk**